**MINUTES OF THE PUBLIC HEARING MEETING FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) – TAMIL NADU FOR THE PROPOSED ROUGH STONE QUARRY OF M/S. A. KRISHNAMOORTHY OVER AN EXTENT OF 2.50.0 HECTARES LOCATED IN S.F.NO. 135 (PART-6) OF IYANGUNAM VILLAGE, KILPENNATHUR TALUK, TIRUVANNAMALAI DISTRICT, CONDUCTED ON 22.05.2025 AT 1.00 PM IN M/S. KASTHURI AZHWAR THIRUMANA MANDABAM, SOMASIPADI, KILPENNATHUR TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru. S. RajaKumar | Revenue Divisional Officer, Tiruvannamalai. |
| 2. | Tmt. T. Kalaiselvi | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai |
| 3. | Selvi. R. Vijayashree | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 4. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 5. | Thiru. Venugopal | Deputy Tahsildar, Kilpennathur, Tiruvannamalai. |
| 6. | Thiru. Govindhan | Revenue Inspector, Kilpennathur, Tiruvannamalai. |
| 7. | Thiru. Arulmurugan | Assistant Geologist, Geology and Mining, Tiruvannamalai. |
| 8. | Thiru. Kannan | Village Administrative Officer, Kanalapadi. |
| 9. | Public and NGOs | 49 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, on behalf of the Tamil Nadu Pollution Control Board welcomed the Revenue Divisional Officer, Tiruvannamalai who presided the public Hearing meeting, the Government officials, the public & the NGOs and explained the need of the Public Hearing for obtaining Environmental Clearance for the proposed Rough stone quarry as follows:

"The public hearing meeting is being conducted for the proposed project of M/s. A. Krishnamoorthy Rough stone Quarry over an extent of 2.50.0 hectares in Iyangunam Village, Kilpennathur Taluk, Tiruvannamalai District for obtaining prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA)as per the Environmental Impact Assessment Notification 2006."

As per EIA Notification 2006, the mining projects (Individual or Cluster) having extent above 5 hectares requires prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority. This public hearing meeting will be recorded and submitted in the form of audio and video to the State Environment Impact Assessment Authority. Accordingly, the public notice for this public hearing was published in dailies of "The New Indian Express" (English) & "Dinamalar" (Tamil) on 16.04.2025 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed Rough stone quarry of M/s. A. Krishnamoorthy which is to be conducted at M/s. Kasthuri Azhwar Thirumana Mandabam on 22.05.2025 @ 1.00 PM.

The District Environmental Engineer further stated that the proposed quarry project and its Environmental Impact Assessment Study report details will be explained through power point presentation by the project proponent. Following the presentation, the public and NGOs can express their views, suggestions, and comments one by one either in oral or in written format on the said project. The opinions & suggestions of the public & NGOs will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority. Thereafter, the Authority will decide on the issue of Environmental Clearance to this proposed quarry.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai requested the project proponent to explain about the proposed rough stone & gravel quarry and the Environmental Impact Assessment study conducted by them to the public in detail.

On behalf of the project proponent, Tmt. K. Abirami, Coordinator, M/s. Global Mining Solutions, Salem (Consultant for the proposed rough stone quarry of M/s. A. Krishnamoorthy) explained the details of the project and the Environmental Impact Assessment study conducted by them through power point presentation.

Then the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one and instructed the participants to provide their name and address before sharing their feedback, and to do so one by one, to ensure an orderly & transparent process.

The following are the views/suggestions/comments represented by the public.

**1. Mrs.L. Velankanni Lawrence, Somasipadi Village**

She greeted everyone and said, "I've heard that the project proponent provides Blue metal aggregate and M-sand at affordable prices to the surrounding people and also supports education and spiritual activities and requested to grant permission to the quarry since the quarry is being beneficial to the surrounding people." Thus, she concluded her speech by **supporting** the establishment of the proposed quarry.

**2. Mr. Paavaadai, Somasipadi Village.**

He said, "Mr. Krishnamoorthy has done lot of good deeds for us" and concluded his speech.

**3. Mr. Subramani, Iyangunam Village.**

He stated that, "The proponent has done numerous help to the villagers of Iyangunam and also planted tree saplings around the hill," and concluded his speech.

**4. Mr. Sathish S/o. Radhakrishnan, Vatraputhur Village.**

He said, "We believe that Mr. Krishnamoorthy Arumugam will implement numerous projects in Vadrapputhur and Iyangunam panchayats. We request that he continue to support temples and educational institutions" and concluded his speech.

**5. Mr. Inbasekaran, NGO, Ranipet.**

He said, "I didn't expect a quarry to receive so much support. I'm extremely happy" and concluded his speech.

**6.Mr. Anandha Kumaran Jayaraman, Somasipadi Village,**

He said, "I'm just a simple mason. Whenever we need any materials, the proponent supplies immediately without delay thereby ensuring our work doesn't stop" and concluded his speech.

**The following 6 nos. of the public have expressed their opinion in writing on the proposal of this Rough stone quarry. All the 6 nos have expressed their support to the operation of this quarry.**

| S.No | Name & Place | Comment |
|---|---|---|
| 1. | Tmt. P. Kalamma, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 2. | Tmt. V.Narayanamma, Hyderabad. | Expressed support in favour of the proposed quarry |
| 3. | Thiru. K. Govardhan, Hyderabad. | Expressed support in favour of the proposed quarry |
| 4. | Thiru. K. Shankar, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 5. | Thiru. P. Sydaiah, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 6. | Tmt. K. Vinoda, Telangana. | Expressed support in favour of the proposed quarry |

As there were no views/comments raised further, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the approval of Revenue Divisional Officer, Tiruvannamalai, announced that the meeting has come to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 16.04.2025 for notifying the public hearing meeting)
2. The certificate issued by the Village Administrative Office for the Audio announcement and issue of notices.
3. Attendance sheet at the public hearing (05 pages/49 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing/Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. EIA Report & Executive summary (Tamil & English).
7. Petitions received through Public Hearing Meeting – 6nos

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

**Revenue Divisional Officer,**
(5/6) **Tiruvannamalai.**

**<u>திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், ஐங்குணம் கிராமத்தில் புல எண்கள். 135 (Part-6)-ல் 2.50.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. A. கிருஷ்ணமூர்த்தி சாதாரண கல் குவாரி சுரங்கத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 22.05.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், சோமாசிபாடியில் அமைந்துள்ள திரு. கஸ்தூரி ஆழ்வார் திருமண மண்டபத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.</u>**

**பங்கேற்றோர்:**

**<u>திருவாளர்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | திரு. S. ராஜகுமார் | வருவாய் கோட்ட அலுவலர்,<br>திருவண்ணாமலை. |
| 2. | திருமதி. தி. கலைச்செல்வி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 3. | செல்வி. இரா. விஜயஸ்ரீ | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 4. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 5. | திரு.வேணுகோபால் | துணை வட்டாட்சியர்,<br>கீழ்பென்னாத்தூர்,<br>திருவண்ணாமலை. |
| 6. | திரு.கோவிந்தன் | வருவாய் ஆய்வாளர்,<br>கீழ்பென்னாத்தூர்,<br>திருவண்ணாமலை. |
| 7. | திரு. அருள்முருகன் | உதவி புவியியலாளர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>திருவண்ணாமலை. |
| 8. | திரு. கண்ணாளன் | கிராம நிர்வாக அலுவலர்,<br>கானலாடி. |
| 9. | பொதுமக்கள் மற்றும்<br>சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (49 நபர்களின் பட்டியல்<br>இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மதிப்பிற்குரிய வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை அவர்களையும், கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அரசு அதிகாரிகளையும், பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

"திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், ஐங்குணம் கிராமத்தில், 2.50.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். A. கிருஷ்ணமூர்த்தி சாதாரண கல் சுரங்க நிறுவனமானது பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006-ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை ஒலி மற்றும் ஒளி பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். A. கிருஷ்ணமூர்த்தி சாதாரண கல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தி/ள். கஸ்தூரி ஆழ்வார் திருமண மண்டபத்தில் 22.05.2025 அன்று பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெறுமென தினமலர் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பரஸ் செய்தி தாள்களில் 16.04.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் போது பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினர் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்கள். தற்போது வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைப்பார்கள். அதன் பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள்".

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருவண்ணாமலை அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார். மேலும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கும் போது தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் குறிப்பிட்டு கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திருமதி. கே. அபிநயா, ஒருங்கிணைப்பாளர், தி/ள். குளோபல் மைனிங் சொல்யுசன்ஸ், சேலம் (தி/ள். A. கிருஷ்ணமூர்த்தி சாதாரண கல் குவாரி திட்டத்தின் ஆலோசகர்) அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருவண்ணாமலை அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1. திருமதி. L. வேளாங்கண்ணி லாரன்ஸ், சோமாசிபாடி கிராமம்.**

இவர் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்து, "சுற்றுவட்டார மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் மலிவான விலையில் ஜல்லி எம்செண்ட் ஆகியவை அளிக்கிறார். மற்றும் கல்வி, ஆன்மீகம் சம்பந்தப்பட்ட உதவிகளை செய்து வருகிறார் என கேள்விப்பட்டிருக்கிறேன். மேலும் இந்த கல்குவாரியினால் மக்கள் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளதால் இதற்கு அனுமதி அளிக்க கேட்டுக்கொள்கிறேன்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**2. திரு. பாவாடை, சோமாசிபாடி கிராமம்.**

இவர் கூறுகையில், "திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எங்களுக்கு நிறைய செய்துக் கொடுத்துள்ளார்" என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**3. திரு. சுப்ரமணி, ஐங்குணம் கிராமம்.**

இவர் கூறுகையில், "ஐங்குணம் கிராமத்திற்கு எண்ணற்ற உதவிகளை செய்து கொடுத்து வருகிறார். மலையைச் சுற்றி மரக்கன்றுகளை நட்டிருக்கிறார்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**4. திரு. சதீஷ், த/பெ. இராதாகிருஷ்ணன், வட்ராப்புத்தூர் கிராமம்.**

இவர் கூறுகையில், " இந்த கிருஷ்ணமூர்த்தி ஆறுமுகம் அவர்களால் வட்ராப்புத்தூர் மற்றும் ஐங்குணம் ஊராட்சியில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று நம்புகிறோம். மேலும் கோவில்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் மேம்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்" என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**5. திரு. இன்பசேகரன், NGO, ராணிப்பேட்டை.**

இவர் கூறுகையில், " ஒரு கல் குவாரிக்கு இவ்வளவு ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது" என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**6. திரு. ஆனந்த குமரன் ஜெயராமன், சோமாசிபாடி கிராமம்.**

இவர் கூறுகையில்," நான் ஒரு சாதாரண கொத்தனார் வேலை தான் செய்து வருகிறேன். எங்களுக்கு எந்த ஒரு பொருள் இல்லை என்றாலும் உடனடியாக தொடர்பு கொண்டால் வேலை நிறுத்தாமல் உடனடியாக உதவி செய்கிறார்" என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 6 நபர்கள் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவது குறித்த தங்களின் கருத்துகளை தெரிவித்தனர். இதில் 6 நபர்களும் குவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர்.**

| வ. எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | திருமதி. P. கலம்மா, தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 2. | திருமதி. V. நாராயணம்மா, ஹைதராபாத். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 3. | திரு. K. கோவர்தன், ஹைதராபாத். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 4. | திரு. K. சங்கர், தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 5. | திரு. P. சைதையா, தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 6. | திருமதி. K. வினோதா, தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

**<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 16.04.2025).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (05 பக்கங்கள்/49 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் வாயிலாக பெறப்பட்ட 6 மனுக்கள்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

**வருவாய் கோட்ட அலுவலர்,**
**திருவண்ணாமலை.**

(316)